பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a Newspaper in Sri Lanka.

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 20 திங்கட்கிழமை (26-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 68

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1518)

# 2001ம் ஆண்டில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு 100கோடி ரூபா ஒதுக்கீடு!

## ரான் தலைவர் வாமதேவா தெரிவிப்பு

(அலுவலக நிருபர்)

இரண்டாயிரத்து ஓராம்ஆண்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுமார் நூறுகோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

இச் செலவினத்திற்கான அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவுடன் அபிவிருத்தித்திட்டங்கள் அமுல் செய்யப்படும்.

இவ்வாறு வடக்கின் மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் என். வாமதேவா வலம்புரிக்கு நேற்றுமாலை அளித்த விசேட பேட்டிஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது.

யாழ்மாவட்டத்தைப் புனரமைக்கும் பணிகள் வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ்விவகாரஇந்து

→8ஆம் பக்கம் பார்க்க

## போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

400ரூபாசம்பளஉயர்வுகோரி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று ஏழாவது நாளாக நடைபெற்றது.

நேற்றைய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சி சார்புடைய தொழிற் கட்சிகளும் கலந்து கொண்டன.

இதேவேளை உயர் கல்வி அமைச்சர் இந்திககுணவர்த்தனாவும் நேற்றைய சத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை அரசு நீக்கப்போவதில்லை
### ஜனாதிபதி தெரிவிப்பு

நோர்வே அரசின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற் கொள்ளப்பட விருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்காக புலிகள் இயக்கத்தின் மீதுவிதிக்கப்பட்டுள்ள தடையை இலங்கை அரசு ஒருபோதும் நீக்கமாட்டாது: இவ்வாறு இந்திய உயர் மட்டத் தலைவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு இலங்கை இந்திய ஒப்பந்தமே

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலிகாமத்திற்கு திடீர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள அமைச்சரும் ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வலிகாமப் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டார்.

மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, மல்லாகம், தெல்லிப்பழை, சுன்னாகம் ஆகிய பகுதி மக்களை நேரில் சந்தித்த அமைச்சர் பொது மக்கள் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்து கொண்டார்;

தெல்லிப்பழைக்குச் சென்ற அமைச்சர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு சென்று துர்க்கா துரந்தரி அப்பாக்குட்டி தங்கம்மாவையும் ஆலயநிர்வாகத்தினரையும் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அங்கு நிகழ்ந்த சமய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டதுடன், துர்க்கையம்மன் ஆலயநிர்வாகத்தினரால் நடத்தப்பட்டுவரும் மகளிர்

→2-ம் பக்கம் பார்க்க

## எமது விஜயத்தில் உள் நோக்கம் இல்லை
### ஐரோ. குழு தெரிவிப்பு

இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக அறிந்துகொள்ளவேநாம் இலங்கை வந்தோம் எமது விஜயத்தில் வேறு எந்தவிதமான உள்நோக்கங்களும் இல்லை.

ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் நேற்று நாடு திரும்புகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை வந்திருந்த ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சிதலைவர் மற்றும் தமிழ்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்து உரையாடியதும் தெரிந்ததே. (வ

## போதிய ஆயுதங்கள் இருந்தும் படையில் ஆள்பற்றாக்குறை
### பிரதமர் ரட்ணசிறி உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கு அரசாங்கம் இராணுவத்தினருக்கு நவீன போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது. எனவே சிங்கள மக்கள் இராணுவத்தில் சேர்வதற்கு முன்வர வேண்டும்:

கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் புதிய சத்திர சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்துப் பேசிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் தெரிவிக்கையில்;

இராணுவத்தில் சேருமாறு நாம் விடுத்த அழைப்பை ஏற்று சுமார் 3500 இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். இராணுவத்தினருக்கான ஆயுத தளபாடங்கள் போதியளவு இருந்த போதும் ஆள் பற்றாக்குறை நிலவுவதால் யுத்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சுகளில் இடம்பெறும் புதியநியமனங்களுக்கு தடை
### ஜனாதிபதி செயலகம் உத்தரவு

(கொழும்பு)

அமைச்சர்களும், அரச திணைக்களங்களும் புதிய ஆலோசகர்கள் எவரையும் நியமிக்கக்கூடாதென ஜனாதிபதி செயலகம் நேற்று கண்டிப்பான உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

அவ்வுத்தரவில், அமைச்சுக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 30 ஈழத்தமிழர்களை ஜேர்மன் திருப்பியனுப்பும்!
### ஊர்வலம் நடத்த முஸ்தீபு

(லண்டன்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய 30 ஈழத் தமிழ் அகதிகளை அங்கிருந்து இலங்கைக்கு அவசரமாக திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஜேர்மனிய அரசு ஈடுபட்டுள்ளது.

இதனையடுத்து ஈழத் தமிழர்களைஇலங்கைக்கு திருப்பியனுப்ப வேண்டாமெனக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நோர்வேயின் சமாதான முயற்சியை கைவிட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடவும்
### இலங்கை அரசிடம் சுப்பிரமணியசுவாமி வேண்டுகோள்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாய் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்:

இவ்வாறு இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி பிரதமர் வாஜ்பாயிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கு இவ் ஆலோசனையை வலியுறுத்திக் கூறுமாறும் தெரிவித்த சுவாமி மேலும் கூறுகையில்;

நோர்வேயின் சமாதான முயற்சிகளை இலங்கை அரசாங்கம்கைவிட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரானபோரை தீவிரப்படுத்தி புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை கைது செய்து அவரை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று இலங்கை அரசைத் தான் கோருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4,

## 2 வதுநாளாக தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்'மாநகர சபை சுகாதாரப் பகுதியினரின் கறுப்புப் பட்டிப் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகத் தொடர்கிறது.

இதேவேளை மேயர் ரவிராஜ் இன்று யாழ்வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ந)

# விபத்தில் பயணிகள் காயம்

(கொழும்பு)

பொலநறுவைப் பகுதியில் காஸ்சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றும் பயணிகள் பேருந்தும் விபத்துக்குள்ளாகியதில் 14 பயணிகள் காயமடைந்துள்ளனர். (செ-9)

# பாம்பு தீண்டியவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

உறவினர் வீட்டில் திரைப் படம் பார்த்துவிட்டு இரவு வேளை வீடு திரும்பிய நபர் ஒருவர்வழியில் பாம்பு தீண்டியதை அடுத்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பருத்தித்துறை வராத்துப் பளையைச் சேர்ந்த கார்த்திகேசு அரியநாயகம் [வயது-27] என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர். [க-23]

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(யாழ்ப்பாணம்)

வெவ்வேறு சம்பவங்களின் போது உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் தரப்பினர் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தில் தென்னவன் (இரத்தினம் சசிக்குமார்-யாழ்மாவட்டம்) என்பவரும்,

19 ஆம் திகதி மன்னாரில் மின்சாரம் தாக்கியதால் கப்டன்யாழ் வேந்தன் இராசரத்தினம் பிரசன்னவதனன்-யாழ் மாவட்டம்) என்பவரும்,

22 ஆம் திகதி அரியாலை, கைதடி, கோப்பாய் ஆகிய பகுதிகளில் முன்னேறிய இராணுவத்துடனான மோதலின் போது எல்லைப்படை வீரர்களான விமலச் சந்திரன் (பரமநாதன் விமலச் சந்திரன்-கிளிநொச்சி) விஜயன் (வேலாயுத பிள்ளை விஜயகுமார்-கிளிநொச்சி) ரங்கன் (மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் கிளிநொச்சி) ஆகியோரும்,

24 ஆம் திகதி படையினருடனான மோதலில் லெப்ரினன் கலைச்சுரபி மதியரசி (தர்மலிங்கம் பிரேமலட்சுமி நெடுங்கேணி) ஆகியோரே உயிரிழந்தவராவர். (க-09)

# வடமராட்சி மீனவர் பிரச்சினை குறித்து

# தென். இலங்கை மதகுருமார் ஆராய்வு

(வடமராட்சி கிழக்கு)

தென் இலங்கையில் இருந்து யாழ் வந்துள்ள 24 கிறிஸ்தவ மதகுருமார் அடங்கிய குழுவினர் வடமராட்சி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து வடமராட்சி கடற்றொழில் சமாசத்தில் ஆராய்ந்தனர்.

மேற்படி சமாசத் தலைவர் சூரியகுமார் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போது,

விடுதலைப் புலிகள் மூன்றாவது தடவையாகவும் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தினை அரசு நல்ல முறையில் பயன்படுத்தி இலங்கையில் அமைதி ஏற்பட வழிவகைகள் செய்ய வேண்டும் எனவும், சுதந்திரமாக கடற்றொழில் புரிய அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் மதகுருமாரிடம் வலியுறுத்திக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்தவேளை தமக்கு அவர்கள் பாதுகாப்பாக விளங்கியமை குறித்தும்,

தற்போது படையினர் தமது பாதுகாப்பு நலன் கருதி மீன்பிடிக்க தடைகள் விதித்திருப்பது குறித்தும் வடமராட்சி கடற்றொழில் சமாச பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்டது.

மீனவர்களின் இக்கட்டான நிலையை கருத்திற்கொண்டு மீன்பிடி அமைச்சிடம் இது விடயத்தை எடுத்துகூறி சுமூகமான தீர்வுகான உதவுவதெனவும் கிறிஸ்தவ மதகுருமாரால் உறுதி கூறப்பட்டது.

இதேவேளை, 7 கிறிஸ்தவ சிங்கள மதகுருமார் மற்றும் ஸ்கொட்லாந்து நாட்டு மதகுரு றொனி போமல் உள்ளிட்ட மேற்படி 24 மதகுருமார் யாழ் நிலையையும் மக்களின் துன்பங்களையும் நேரில் கண்டறியும் நோக்கில் இங்கு விஜயம் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-உ-43)

# சிவரூபனின் யப்பான் பயணத்தடை

## வடமராட்சிகல்விப்பணிப்பாளர் விளக்கம்

## வலம்புரிமீது கரும் சாடல்

(யாழ்ப்பாணம்)

வல்வை சிவகுரு வித்தியாலய மாணவன் சிவரூபனின் யப்பான்பயணத்தில்ஏற்பட்ட மோசடிகள் குறித்துவலம்புரி பலதடவைகள் செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

அதற்கு வடமராட்சிக கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அவர்கள் அனுப்பிய கடிதம் அப்படியே இங்கு தரப்படுகிறது;

ஆசிரியர்.
வலம்புரி

தங்கள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் யாழ். மாவட்டத்தில் உயர் புள்ளி பெற்ற யா/வல்வை சிவகுரு வித்தியாலய மாணவன் யப்பானுக்கான சுற்றுலாவிற் சேர்க்கப்படாமை பற்றி வலயத்திணைக்கள அதிகாரிகளைக் கடுமையாகச் சாடியுள்ளமை வருத்தத்திற்குரிய ஒன்றாகும் இது சம்பந்தமாக பத்திரிகையிற் பிரசுரிப்பதற்கு முன்பு, பத்திரிகைதர்மத்தைப் பேணும் நோக்கோடு வடமராட்சிவலயக் கல்வித்திணைக் களத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைத் திரட்டிய பின்பு ஆசிரியர் தலையங்கத்தை எழுதியிருக்கலாம். உண்மையான புள்ளி விபரங்கள் எதனையும் பெறாது, தங்களுக்குத் தோன்றிய விதத்தில் எழுதியமை, எம்மைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏனையோரில் உருவாக்கியதுடன், எமக்குக் களையும் பூசப்பட்டது எம்மை வருத்தத்திற்குள்ளாக்கியுள்ளது. இது பற்றிய உண்மையான விபரத்தைப் பின் வருமாறு அறியத்தருகின்றேன்.

★ கல்வி, உயர்கல்வி அமைச்சிடமிருந்த தரம் 5 இல் சித்தி பெற்ற மாணவர் பெயர்ப்பட்டியல் ஒன்று யாழ்ப்பாணவலயத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து வடமராட்சி வலயத்திற்குக் கிடைக்கப் பெற்றது. அப்பட்டியலில்இக்குறிப்பிட்ட மாணவனின் பெயர் இடம் பெறவில்லை.

★ இப்பட்டியலுடன்இணைக்சப்பட்ட கடிதத்தில் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தை உறுதி செய்து அனுப்பும்படி கோரப்பட்டதே தவிர யப்பான் செல்வது சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

★ இப்பட்டியலில் உள்ள மாணவர்களில் அதிகுறைந்த புள்ளி 171 ஆகும். எனினும் 171 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற இவ் வலய மாணவர்களின் பிறப்புச்சாட்சிப் பத்திரத்தைப் பெற்று உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டது.

★ எம்மால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இம் மாணவனின் பெயரில், இவர் இம்மாவட்டத்தில்உயர்புள்ளி பெற்றவர்என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**முக்கிய குறிப்பு.**

இதற்கான விளக்கம் நாளைய வலம்புரியில் வெளிவரும். (ஆ-ர்)

# தே.இ.சே. மன்றத்தின் யாழ். மாவட்ட சம்மேளனம் அங்குரார்ப்பணம்

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட சம்மேளனம் கடந்த திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் பிரதேச ரீதியில் அமைக்கப்பட்டபத்து பிரதேசசம்மேளனங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகள் மூலம்இம் மாவட்டசம்மேளனம் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் யாழ். மாவட்ட சம்மேளனத் தலைவர் சி. ஜெயக்குமார் தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில்மாவட்ட இளைஞர் சேவைகள் உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி மாவட்டஇளைஞர்சேவைகள் உத்தியோகத்தர் அ. சக்திவேல் மாவட்ட நிஸ்கோ முகாமையாளர் செ. நாகேந்திரம் உட்பட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்களும் கழகங்களைச் சேர்ந்த இளைஞர்யுவதிகளும் கலந்து கொண்டனர்.

இவ் அங்குரார்ப்பண வைபவத்தில் கழக உறுப்பினர்களால் பின்வருவோர் ஏக மனதாக யாழ் மாவட்ட சம்மேளன நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராகநீ: பிரபாகரன் உபதலைவராகசெல்விசி. பிஷ்மன், உபசெயலாளர்களாக சி. ஜெயகுமார், தி. தயாளன், பொருளாளராக கு. பன்னீர்ச் செல்வன் அமைப்பாளராக தி. பிரபாகரன் மற்றும் கல்வி பயிற்சி வேலைவாய்புக்கு ம. ரவீந்திரராஜாவிளையாட்டு கலாசார வெளிநடவடிக்கைக்கு ஞா. செந்தமிழ்ச் செல்வன் வழிகாட்டல்ஆலோசனைக்கு சு. புலேந்திரன் தொழில் முயற்சி வியாபார அபிவிருத்திக்கு செ. பாக்கியராஜா ஆகியோரும் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர் நிர்வாக உறுப்பினர்களாக எஸ். விமலறூபன், க. செந்தூரன், ஜெ. ஜெயாசோ, சத்தியமாலா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். [உ-59]

## அமைச்சர்- - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இல்லம், அநாதைச்சிறுவர் இல்லம், ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வையிட்டதுடன், துர்க்கா துரந்தரியினால் அளித்த மதிய போசனத்திலும் கலந்து கொண்டார்.

இச்சந்தர்ப்பத்தில் வலிவடக்குப் பிரதேசசபைத் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகருமான திருமதி ஸ்ரீ பாஸ்கரனும் கலந்து கொண்டார்.

இதனையடுந்து வலிவடக்கிலிருந்துஇடம்பெயர்ந்துமல்லாகம் சுன்னாகம், ஆகியஇடங்களில்உள்ள நலன்புரி முகாங்களில் வாழும் மக்களையும் சந்தித்துஅங்குள்ள மக்களின் குறைநிறைகளையும் அமைச்சர்கேட்டறிந்து கொண்டார்;

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் சுகவீனமுற்ற நிலையில் தங்கியுள்ள அதிவணக்கத்துக்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும் சென்று அமைச்சர் டக்ளஸ் சந்தித்தார்.

மேலும் மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிற்குச் சென்ற அமைச்சர் அங்குள்ள அரசதிணைக்களங்களுக்கு, கட்சி அலுவலகங்களுக்கும் விஜயம்செய்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பாராளுமன்ற உறுப்பினர் கா. வே. குகேந்திரன் (ஜெகன்), ஈ பி டி.பி தீவக அமைப்பாளர் ந. மதனராஜா, ஈ. பி. டி.பியின் முக்கிய பிரமுகர் த. சிவகுமாரன் (பவான்), வலிமேற்குப் பிரதேச சபைத்தலைவர் ந திரிலோகநாதன் [லோகன்]. வலி தென்மேற்குப் பிரதேசசபைத் தலைவர்வே. அன்ரன்ஜோண்சன் [ஜீவா], ஈ.பி.டி.பி யின் வலிவடக்கு அமைப்பாளர் தி. சிவகுமார், சுன்னாகம் அமைப்பாளர் கமலசேகரன் (பாபு) ஆகியோரும் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது: (க)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரான்லி கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல்1.30 மணிக்கு மேற்படி விளையாட்டு மைதானத்தில் அதிபர் வி: மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது

இவ் விழாவின் முதன்மை விருந்தினராக யாழ்மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சு. சண்முகரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ். வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனும் கலந்து கொள்வர்.

வைத்திய கலாநிதி சுமதி சண்முகரட்ணம் பரிசுகள் வழங்குவார் (க)

# ஊரெழுவில் நாளை நடமாடும்சேவை

(ஆவரங்கால்)

கோப்பாய் பிரதேசசெயலக நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை ஊரெழுவில் இடம் பெறஉள்ளதாக மேற்படி செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ஊரெழு மற்றும் அதனை அண்டிய பகுதி மக்கள் தமது பிரச்சினைகளை இவ் அலுவலகத்தில் முறையிட்டு பரிகாரம் காணலாம் என்றும் அவ் உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார். (க-57)


## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## சங்கப் பொதுச்சபை அங்கத்தவர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் 2001 ம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவும்

## (18. 03. 2001)

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 18. 03. 2001 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு சங்கத் தலைவர் திரு. பொ. தவராசலிங்கம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறவிருக்கின்ற தென்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

உபவிதி 26 இல் 7 வதின் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்கவிரும்பின் அப் பிரேரணைப் பிரதியொன்றை 11. 03. 2001 க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறின் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறமாட்டாதென்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ. தவராசலிங்கம்
மாவட்ட தலைவர்.

வி. சொலமன்
மாவட்ட செயலாளர்.

(கி-1525)

# சங்கொழங்கு

## அவலங்களின் நடுவில் குட்டியப்புலம் பாடசாலை

### மாணவரின் கல்வி சீர்பெறுமா ?

யாழ்ப்பாணத்தில் கஷ்டப் பிரதேசமாக கருதப்படுகின்ற குட்டியப்புலம் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை எந்த ஒதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் மிகுந்தசிரமத்தின்மத்தியில்அங்குகடமையாற்றும ஆசிரியர்களால் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பொதுநல நோக்கம் கொண்டோரிடம் உரிய விதத்தில் எடுத்துக் கூறியும் கூட உருப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

தரம் ஒன்று முதல் தரம் 11 வரை சுமார் 300 வரையிலான மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி சுற்று வருகின்ற போதிலும் தளபாட வசதிகளோ, கட்டட வசதிகளோ காணப்படவில்லை.

இப் பாடசாலைக்கு செல்வதற்கென பொதுப்பாதை ஒன்று இருந்தும் கூட அப்பாதையூடாக பயணம் செய்வது மிகுந்த சிரமமாகவே உள்ளது.

துவிச்சக்கரவண்டியைத் தவிர வேறு வாகனங்களில் இப் பாடசாலைக்கு பயணம் செய்வது இயலாத காரியம்.

60' x 20' கொண்ட இரு கட்டடங்கள் மட்டுமே உண்டு 6 வகுப்புகள் மட்டுமே இக்கட்டடத்தில் நடத்தலாம். மிகுதி மூன்று வகுப்புகள் மிக நெருக்கமான அறையில் நடத்தப்படுகின்றன.

இரு வகுப்புகள் தொடர்ச்சியாகமரங்களின் கீழேயே நடைபெறுகின்றன.

ஆசிரியர்களுக்கு உகந்த மேசையோ, கதிரையோ இப் பாடசாலையில் இல்லை. அலுமாரி வசதி எதுவும் இல்லை.

இப்பகுதி மக்களுக்கு மட்டுமல்ல அயல்பகுதி மக்களுககும் கூட இந்தப் பாடசாலை பயன்படுத்தப்படுகிறது.

இப்பாடசாலைக்கென ஒழுங்கான வேலிகள் எவையும் இல்லை. கஷ்டப் பிரதேசம் என்பதாலோ என்னவோ அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவும் உதவி புரிவதில்லை.

இப் பாடசாலைக்கு பொதுப் பாதை உரிய முறையில் அமைப்பதுடன் பாடசாலைக்கான ஏனைய வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். என்பதனையும் வலியுறுத்த விளைகிறோம,

ஆலயங்களுக்கும் களியாட்ட நிகழ்வுகளிற்கும் தாராளமாக வாரியிறைக்கும் தனவந்தர்கள் ஏழைமாணவரின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொளவார்களா?

ராஜா

குட்டியப்புலம்.

## மனித உரிமை மீறல் உயர்நீதி மன்றில்மனுதாக்கு

(கொழும்பு)

பொலிஸாரின மோசமான சித்திரவதைக்குள்ளாகிய இளைஞர் ஒருவர் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினை கொழும்பு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

வன்னிய சிங்கம் சத்தியசீலன் (வயது 24) என்னும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வழக்குத்தாக்கலைச் செய்துள்ளார்.

இவ் இளைஞர் வேலை தேடிக் கொழும்புக்குச் சென்றிருந்த வேளை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டதாகவும்,

கைதிற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமலேயே பொலிஸாரின் தாக்குதலுகுள்ளாகியதாகவும் அம் மனுவில் தெரிவித்துள்ளார்.

இம் மனுத்தாக்கல் செய்தவரின் அடிப்படை மனித உரிமை பேணப்பட நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்றும், மனுதாரர் விடுவிக்கப்பட வேணடு எனவும்,மனுத்தாரரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி உடலில் உள்ள காயங்கள் பற்றிய மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இம் மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

இவரது மனுவை ஆதரித்து சட்டத் தரணிகள் எம்.கதிரவேற்பிள்ளை, சோ. தேவராஜா ஆகியோர் ஆஜராகியுள்ளனர். (செ)

## தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்துவயோதிபர் மரணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் வயோதிபர் ஒருவர் தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்தமையினால் மரணமடைந்துள்ளார்.

ஊர்காவற்றுறைஉப்புக்குளவீதியைச் சேர்ந்த நன்னிவைரமுத்து (வயது 75) என்பவரே வீட்டுக் கிணற்றுக்குள் தவறுதலாக விழ்ந்தமையினால் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

கடந்த வெள்ளிக் கிழமை நண்பகல் 1 00 மணியளவில் இச் சடலம் ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் கிணற்றில் இருந்து எடுக்கப்பட்டு விசாரணையின் பின் உறவினரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

(உ-75)

# அரச உயர் பதவிகளில் தமிழர்கள் நியமிக்கப்படுவது மிகவும் அவசியம்

(கொழும்பு)

அரச உயர் பதவிகளில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவது அவசியம்.

இவ்வாறு தேசிய இன நல்லிணக்க கனிப்பொருள் மூல வளப் பிரதியமைச்சர் எஸ். கணேசமூர்த்தி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

அரச உயர் பதவிகளுக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் போது கட்டாயம் தமிழ் தெரிந்த அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

இதுவரைகாலமும் அரச திணைக்களங்களில் தமிழ் தெரிந்த உயர் அதிகாரிகள் நியமனம் செய்யப்படாமலே புறக்கணிக்கப்பட்டு வந்தனர்.

இந்த நிலையை மாற்றி இன விகிதாசார அடிப்படையில் நியமனங்களை மேற்கொள்ளுமாறு பிரதியமைச்சர் கேட்டுள்ளார்.

அரச திணைக்களங்களில் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படாமையால் தமிழ் மக்கள் அன்றாடம் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவதாலேயே, தமிழ் அதிகாரிகள் உடனடியாக நியமிக்கப்படுவது அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

இதே வேளை சிங்கள மொழித்திட்ட அமுலாக்கலின் போது பாதிக்கப்பட்டு பதவிகளைஇழந்த தமிழ் அரச ஊழியர்கள தமது விபரங்களை உடனடியாக இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சிற்கு அறிவிக்கும் படியும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ)

## இராசி பலன்

26.02.2001

(மாசி 14, திங்கள்)

திருதியை பி.பகல்6.01 வரை
உத்தரட்டாதி மு.பகல் 11.28 வரை
ராகுகாலம் 7.59- 8.59
சுபநேரம் 12.29- 1.59
சித்தம்.

**மேடம்**
பிதாசிந்தை, அலைச்சல், அதிக பிரயாசை, சயனக் குறைவு.

**இடபம்**
மனமகிழ்ச்சி, குடும்பசுகம் முயற்சி கைகூடும், பொருள் வரவு.

**மிதுனம்**
தொழில்ச் சிந்தை, காரிய சித்தி, பெரியோர் ஆசி, நிலை மாறல்.

**கடகம்**
திட்டமிடல், பிரயாணம், உடல்ச் சோர்வு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
அகால போசனம், மனக் குழப்பம், காரிய தாமதம், திடீர்ப் பிரச்சினை.

**கன்னி**
வாகன வசதி, கௌரவம், கடன் பிரச்சினை, முயற்சி வெற்றி.

**துலாம்**
உத்தியோக மேன்மை, அரச ஆதரவு, சந்தோஷம், காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
வியாபார மேன்மை, ஆராய்ச்சி, வியாதி, அமைதிக் குறைவு.

**தனுசு**
வீண் தொல்லை, திட்டமிடல், உறவினர் வெறுப்பு, திடீர் நன்மை.

**மகரம்**
வாக்குமேன்மை, பெரியோர் ஆசி, பிரயாணம், வெற்றி வாய்ப்பு.

**கும்பம்**
காரிய சாதனை, போசன சுகம், பணவிரயம், மதிப்புக் குறைவு.

**மீனம்**
சுபசெலவு, கௌரவம், புதிய பொருள் சேர்ப்பு, முயற்சி வெற்றி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தாபன ரீதியில் தொழிலாளர் கல்வி சம்பந்தமான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத் திணைக்களமும் தொழிற் திணைக்களமும் இணைந்து தாபன ரீதியான தொழிலாளர் கல்வி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை கூட்டுறவு பொது முகாமையாளர்சள், நிர்வாகத் தலைவர்கள் ஆகியோர் அண்மையில் நடத்தினர்.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் தலைமையில் யாழ்மாவட்ட கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கூட்டுறவுத் துறையுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான சட்டங்கள், அவற்றின் மூலம் கூட்டுறவின் அங்கத்தவர்கள் பெறக்கூடிய நன்மைகள் பற்றிய விளக்கங்களும் கூட்டுறவு பணி கொள்வோர் பணியாளர் தொடர்புகள் சீரானதாக இருக்க வேண்டிய தேவையையும், கூட்டுறவு ஊழியர்களுக்கு சேமலாப நிதி பெற்றுக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

(உ-2.6)

## தப்பிய சிறைக்கைதி செஞ்சிலுவையில் சரண்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட சமயம் யாழ். பஸ்நிலையத்தில் வைத்து சிறைக்காவலரைத் தாக்கிவிட்டு தப்பிச்சென்றதாகக் கூறப்பட்ட சிறைக்கைதி சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தில் கடந்த வியாழக்கிழமை சரணடைந்துள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 23 வயதுடைய மார்க்கண்டு சுதன் என்பவரே தப்பிச் சென்று சரணடைந்தவர் ஆவார்

செஞ்சிலுவை அதிகாரிகள் இவரை யாழ். நீதவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

(ந-9)

## தீக் காயங்களுடன் வர்த்தகர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

எரிந்துகொண்டிருந்த பெற்றோல்மாக்ஸ் தவறிவீழ்ந்ததில் எரிகாயங்களிற்குட்பட்ட வர்த்தகர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டியில் வர்த்தக நிலையம் ஒன்றில் இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது உடுப்பிட்டி இலக்கணாவத்தையைச் சேர்ந்த பொன்னு யோகராசா (வயது 46) என்பவரே காயமடைந்தவராவர்.

இச்சம்பவத்தின் போது பிரஸ்தாபநபரின் மகனும் சிறு காயங்களுக் குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-23)

## பொன்னார் பகுதியில் கண்ணிவெடிகள் அழிப்பு

(கொழும்பு)

பொன்னார் பகுதியில் இருந்த கண்ணிவெடிகள் கடந்த 22 ஆம் திகதி படையினரால் கைப்பற்றப் பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ,வவுனியாவிற்கு தென் மேற்குப் பக்கமாகவுள்ள இராசேந்திரக் குளம் பகுதியில் இருந்து சுமார் 20 கிலோ கிராம் எடையுடைய வெடி பொருட்களை படையினர் கைப்பற்றி உள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(க- 09)

## தகவல் பூங்கா நேற்று திறந்து வைப்பு

[யாழ்ப்பாணம்]

தகவல் தொழில் நுட்பப் பூங்கா நேற்று ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார். இந்நிகழ்வில்யாழ் அரச அதிபர்க. சண்முகநாதன், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமியார் ஸ்ரீ நாகவிகாரை தேரர் ஸ்ரீ சுமங்கல நாரத்தின தேரர் யாழ் ஜும்மா பள்ளிவாசல் மௌனவிமுசைதீன் உட்படபலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இப்பூங்காவின் பணிப்பாளராக நந்தகுமாரும் நிர்வாக பொறுப்பினை மணிவண்ணனும் ஏற்றுள்ளனர்.

(க-12)

# செய்தித் துளிகள்

## கிளை நிலையம்

(கல்வயல்)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கட்டடப் பொருட்கள், இரும்பு கனரகப் பொருட்களை விற்பனை செய்யும் கிளை நிலையம் ஒன்றைப் புதிதாக திறந்துள்ளது.

இந்தக் கிளை 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்யும் சங்க எல்லைப்பரப்பிலுள்ள வாடிக்கையாளருக்கு அவர்களது வீடுவரை கொள்வனவு செய்த பொருட்கள் ஏற்றியிறக்கும் சேவையை இலவசமாகச் செய்து வருகின்றது.

இதனால் இப்பகுதியில் வீடுகள் கட்டடங்கள் அமைப்போர் சிரமமின்றி தமது கட்டடப் பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்கின்றமையை அவதானிக்க முடிகிறது. (உ-111)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கைப் பகுதி வீடொன்றில் புகுந்த திருட்டுக் கும்பலின் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

திருடர்களை இனம் கண்ட வளர்ப்பு நாய் குரைக்கவே வீட்டார் விழிப்படைந்ததையடுத்து கள்வர் தம் முயற்சியை கைவிட்டு ஓட்டம் பிடித்ததாய் தெரியவந்துள்ளது. (உ)

## மாசி மாதக் கொடுப்பனவுகள்

(மந்திகை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் புற்றுநோய், மற்றும் காசநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மாசி மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக அப்பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வப்பகுதி தபால்மற்றும் உப-தபால் அலுவலகங்களில் மேற்படிகொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

## யுவதிகள் ஐவர் தெரிவு

(துன்னாலை)

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் ஜே. 3 இன் கிராம சேவையாளர் பிரிவும் இணைந்த நுண் கருத்திட்டத்தின் கீழ் 5யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மேற்படி சங்க செயலர் மகீர்த்திநாதன் தெரிவித்துள்ளார். அவர்கள்

தெய்வேந்திரம் உதயமலர், சண்முகம் வீதி சாவகச்சேரி

சிவசோதி சுதர்சினி, பெருங்குளம், சாவகச்சேரி

கந்தசாமி ஜெந்தி, கண்டுவில் சாவகச்சேரி

தம்பிராசா மகிந்தா, கண்டுவில், சாவகச்சேரி. முருகேசு ரேவதி டச்சு வீதி, சாவகச்சேரி ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (க-41)

## வீதி திருத்தியமைப்பு

(கல்வயல்)

நல்லூர் பகுதியிலுள்ள இராசவீதி நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தினரால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (உ-111)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

வலி தென்மேற்குசண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் பொதுஜன மாதாந்தஉதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய், யானைக்கால்நோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் மாசி மாதக்கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அந்தந்த தபாலங்களுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று இவற்றைப் பெறுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-120)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

பத்தைமேனி இரட்ணேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப: 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர். சி. மகேஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு, கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-79)

## முட்புதர் நிறைந்த வீதி

(கல்வயல்)

தொண்டைமானாறு கெருடாவில் பகுதியில் உடுப்பிட்டி வாசிகசாலையடி 15 ஆம் கட்டைக்குச் செல்லும் 751 ஆம் இலக்க பேருந்து செல்லும் வீதியின் இருமருங்கும் முட்புதர்கள் ஓங்கி வளர்ந்து காணப்படுவதால் அவ்வழி செல்லும் பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள், வாகனங்கள் என்பன எதிரேவரும் வாகனங்களுக்கு வழிவிட்டு விலகி வீதியோரம் செல்லமுடியாது அவதியுறுகின்றனர். (உ-111)

## நிர்வாக சபை தெரிவு

(உர்காவற்றுறை)

தெல்லிப்பழை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளன பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் அண்மையில் மல்லாகத்தில் நடைபெற்றபோது புதிய நிர்வாக சபைத்தெரிவு இடம்பெற்றது.

தலைவராக தி:பிரபாகரன், உபசெயலாளராக செல்வி இ. ராகினி, மா சுதாகர் ஆகியோரும் உபதலைவவராகசி. கமலவன், பொருளாளராக சே. சபேசன் ஆகியயோருடன் பிரிவுத்தலைவர்களாக4பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

## ஸ்ரான்லிவீதியில் அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடகிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ்ப்பாண அலுவலகம், ஸ்ரான்லிவீதியில் உள்ள ஈ. பி. டி. பி செயலகத்திற்கு முன்னால் உள்ள கட்டடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இவ் அலுவலகத்தில் அமைச்சின் நடவடிக்கைகள் சந்திப்புக்கள் மற்றும் கூட்டங்கள் என்பன நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

### ஹற்றனில் தொடரும்

# சத்தியாக்கிரக போராட்டத்திற்கு மலையகதேசியகூட்டமைப்பும்ஆதரவு

### அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தேசிய காங்கிரஸ் ஹற்றனில் மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு மலையக தேசிய கூட்டமைப்பு பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் ஹற்றனில் நடந்த பேச்சு வார்த்தை சுமுகமாக இடம் பெற்றதாகவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கைதொழிலாளர்காங்கிரஸ், தொழிலாளர் முன்னணி மற்றும் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றின் பிரதி நிதிகள் இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது நாணய மதிப்பிறக்கம் காரணமாகவும் விலைவாசி உயர்வு காரணமாகவும் 400 ரூபா சம்பள உயர்வை விட மேலதிக சம்பளம் கேட்கப்பட வேண்டும் என்றும் தொழிற் சங்கங்களிற்கும் தோட்டக் கம்பனிகளுக்குமிடையில் சம்பள உயர்வு சம்பந்தமான கூட்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் மலையக தேசிய கூட்டமைப்பு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் தோட்டத் தொழில் சங்க கூட்டமைப்பு போன்றன நாளை 27 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-7)

## பொலநறுவையில் மோதல் இரு பொலிஸார் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் ஒரு கான்ஸ்ட்பிள் காயமடைந்துள்ளார்.

பொலநறுவை மாவட்டம் முத்துக்கல் அம்மன் கோயிலடிப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து பொலிஸ் காவல் நிலையம் ஒன்றில் இருந்து பொலிஸ் குழு ஒன்று அவ்விடத்திற்கு சென்று பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியது.

30 நிமிடங்கள் இடம்பெற்ற இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பிலும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் 2 மாத யுத் நிறுத்தத்தில் மட்டக்களப்பில் ஏற்பட்ட முதலாவது மோதல் இது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-7)

## வங்கியிலிருந்து பணத்தை கொண்டுசென்றவர் பலி

(கொழும்பு)

வங்கிஒன்றிலிருந்துசம்பளப் பணத்தை வாசனத்தில் எடுத்துச்சென்ற நபர் ஒருவர்ஆயுதபாணிகளால் தாக்கப்பட்டதில் உயிரிழந்த சம்பவம் அவிசாவளைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவம்பற்றி மேலும் அறியப் டுவதாவது;

ஜயலத் ஹேவா ரோகண என்பவர் கடந்த வெள்ளியன்று தனியார் நிறுவனத்திற்குரிய சம்பளப்பணத்தை எடுத்துச் செல்லும்போது அவிசாவளை வீதியில்வைத்து ஆயுதம்தாங்கிய நபர்களால் தாக்கப்பட்டு ஸ்தலத்திலே பலியானார்.

இதேவேளை, வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட பணம் களவாடப்படவில்லை என்றும் கொள்ளையர்களை பிடித்து தருபவர்களுக்கு 5 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

மகாராஜா நிறுவனத்தின் கிளை ஒன்றுக்கே இப்பணம் எடுத்துச் செல்லப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க-07)

## தெற்காசியாவில் மட்டும் மூன்றுகோடிதுப்பாக்கிகள்

### பொலிஸ் அதிகாரி தகவல்

(கொழும்பு)

தெற்காசியாவில் மட்டும் மூன்று கோடி துப்பாக்கிகள் புழக்கத்தில் உள்ளதாக பொலிஸ் சிறப்பு பிரிவின்முன்னாள் இயக்குநர் ஆர். சிகன கரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

ஏறத்தாழ இந்த அனைத்து துப்பாக்கிகளும் கடந்த 20 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டு வந்தவை என நம்பப்பட்டு வருகிறது.

இலங்கையை பொறுத்தவரை அங்கே மாக்சிச கிளர்ச்சிகளை ஒடுக்கவும் வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் போராட்டுவதற்கு இலங்கை அரசு ஆயுதங்களை அதிகமாக கொள்வனவு செய்ததை அடுத்து அங்கே கறுப்புச் சந்தையில் ஆயுதங்கள் மலிவான விலையில் பெறக் கூடிய நிலைதோன்றியுள்ளது. (க-7)

## வீதி விபத்தை தடுக்க மாற்று நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

சமகாலத்தில் ஏற்பட்டுள்ள வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடன் மக்கள் நலன்புரிச்சங்க போக்குவரத்துப் பாதுகாப்பு பிரிவினர் கல்வித் திணைக்களங்களின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விழிப்புணர்வுப் பயிற்சியையும் அதனைத் தொடர்ந்து தேவைப்படும் பாடசாலைகளின் முன் வீதிகளில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு செயற்பாட்டிலும் அந்தந்த பாடசாலைகளில் பயிற்சி பெற்ற மாணவர்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்குரிய வீதி ஒழுங்கு கைநூல் ஒன்றையும் நலன் புரிச்சங்க போக்குவரத்துப் பாதுகாப்பு பிரிவினர் வெளியிடவுள்ளனர்.

மேற்படி பயிற்சியை சிறந்த முறையில் பரவலாக நடத்துவதற்கு பிரதேச செயலகங்களில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு அந்தப்பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் ஊடாக இப்பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், இணுவில் இந்துக் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை தவிர்க்கும் நோக்குடன் பாடசாலை சமூகத்தின் வேண்டுகோளிற்கு இணங்க மேற்படி விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். [க]

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு நடைபெறவுள்ளது:

அதிபர் நா.சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ சிவஞானசுந்தரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்: [செ-79]

## தண்ணீர் தாங்கி

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திற்கென தண்ணீர் தாங்கி ஒன்றை நிர்மாணிக்கும் பணியில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நீண்ட காலமாக இப்பாடசாலையில் நிலவி வந்த குடி தண்ணீர் பிரச்சினை குறித்து மேற்படி பாடசாலை அதிபர் சுட்டிக்காட்டியதை அடுத்தே இப் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

இப்பணிக்கான ஆரப்ப நிதியை கோப்பாய் மத்தி காளியம்பாள் ஆலய பிரதம குரு சிவத்திரு ச. தாமேஸ்வரக் குருக்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது: [க-79]

## மாணவர் கௌரவிப்பு

(கோப்பாய்)

புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில். ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்களும், க. பொ: த: சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் நாளை செவ்வாய்க்கிழமை மேற்படி வித்தியாலயத்தில் கௌரவிக்கப்படவுள்ளனர்: [செ-79]

## இன்று ஒரு தகவல்

# உண்மையான பக்தன் யார்?

தினந்தோறும் ஆலயத்துக்கு வந்து கடவுளை வணங்க முடியாதவர்களும் பக்தர்களாக இருக்க முடியுமா? என்று ஒரு சீடர் பகவான்இராமகிருஷ்ணரைக் கேட்டார் அவர் அதற்கு விளக்கமாக பதில் கூறினார்.

கடவுள் பக்தி மிகுந்த ஒருவன் நாள் தோறும் கோயிலுக்கு வருவான். காலில் செருப்புப் போட்டுக் கொண்டு வருவான். கோயில் வாசலில் அதை விட்டுவிட்டு உள்ளே செல்வான். கோவிலில் இறைவனுக்கு வழிபாடு நடக்கும், கற்பூர ஆரத்தி நடக்கும் ஆனால்அவனுடைய மனம் அதில் ஈடுபடாது, எப்போதும் கடவுளை நினைக்கும் அவன் அந்தச் சந்தர்ப்பத்தில் வாசலில் விட்டு விட்டு வந்த செருப்பையே நினைத்துக்கொண்டிருப்பான்.

அது பத்திரமாக இருக்குமோ, இருக்காதோ? யாராவது எடுத்துக்கொண்டுபோய் விடுவார்களோ? என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பான். ஆலயத்துக்கு வந்து கடமை முடிந்தவுடன், இறைவனைத் தரிசித்தவுடன் கோயில் வாசலில் உள்ள செருப்பைத் தேடிப்பிடிக்க ஓடுவான். இன்னொரு பக்தன் கடுமையான உழைப்பாளி காலையிலிருந்து இரவு வரை அவன் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்பவன். அந்தத் தொழிலையே தெய்வமாக நினைப்பவன். அவனுக்குக் கோயிலுக்கு வர நேரமே இருக்காது. ஆனால் வழிபாட்டு நேரங்களில்ஆலய மணி ஒலிக்கும்.

மணி ஓசை அவன் காதுகளில் விழுகின்றது. உடனே அவன் மனம் இறைவனுக்கு நிகழும் வழிபாட்டைக் கற்பனை செய்து கொள்ளும். தன்னுடைய மனத்திரையில் இறைவன் சந்நிதியைக் காண்பான், கற்பூர ஆரத்தியைக் கற்பனையில் எண்ணிப்பார்த்துக் கொள்வான். அவனுடைய இறைவன் தரிசனம் கற்பனையிலேயே முடிந்துவிடும். இறைவனது அருளும், முக்தி நிலையும் இரண்டாமவனுக்குத் தான் கிடைத்தது.

ஒருவன் கோயிலுக்குப் போவது மட்டும் முக்கியமல்ல அவனிடம் நிலவி இருக்கக் கூடிய பக்தி உணர்வுதான் முக்கியம். அது யாரிடம் முழுமையாக நிலவியிருக்கிறதோ அவனே உண்மையான சிறந்த பக்தன் ஆவான் என்றார் பகவான் இராமகிருஷ்ணர்.

கே.கே.இராமலிங்கம்

# சரியான விளையாட்டு மைதானம் தெரிவு செய்யப்படுவதில்லை

## வீரர்கள் புகார்

[ஊர்காவற்றுறை]

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகளினை நடத்துவதற்கு சரியான இடத்தில் உள்ள மைதானங்கள் தெரிவு செய்யப்படுவதில்லை என விளையாட்டு வீரர்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவு பெரிய பரந்தபிரதேச மாகையினால் விளையாட்டு நிகழ்வு நடத்தும் இடத்தை சரியான வகையில் அனைத்து விளையாட்டுக் கழக வீரர்களுக்கும் ஏற்ற வகையில் தெரிவு செய்யப்படுவதில்லை.

இதனால் நயினா தீவில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் 20 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் பயணஞ் செய்து விளையாட்டில் பங்கு பற்ற வேண்டிய நிலை உருவாகி உள்ளதனால் போக்குவரத்தில்பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

விளையாட்டு நிகழ்வினை நடத்தி இடத்தினைத தெரிவு செய்யும பொழுது அனைத்து கழகங்களும் பங்கு பற்றக் கூடியதாக பொதுவான இடத்தினைத் தெரிவுசெய்வதன் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள கழகங்கள் எதிர் நோக்கும் போக்குவரத்து அசௌகரியங்களினைத் தவிர்க்கமுடியும்எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பத்தில் நடத்தப்படவுள்ள தடகள விளையாட்டுப் போட்டியினையாவது பொருத்தமான இடத்தில் நடத்த வேண்டும என எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. [உ-75]

## இலவச பாட நூல்கள்

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வலிகாமப் பகுதிகளில் கல்வி கற்கும் தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்களை, அந்தந்த பாடசாலை அதிபர்களை மாணவர் விபரகள்ளுடன் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலயக் கல்வத்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(உ-41)

## டெஸ்ற் போட்டி

(கொழும்பு)

இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கடந்த வியாழக்கிழமைகாலிசர்வதேச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ற் போட்டியில்இலங்கையணி2விக்கெட் இழப்பிற்கு 22 ஓட்டங்களைப் பெற்றது.

]உ-103]

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலையில்அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை2-1,2-2சேர்ந்த,யாழ் வலயத்தில் பணிபுரியும் தற்போது அதிபராகப்பணிபுரியாதவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்வலயகல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். விண்ணப்பங்கள் யாவும் 2001.03.02 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார். (க)

## பஞ்சுக்கு தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை மாவட்ட அரசினர் பொது வைத்திய சாலையில் பஞ்சுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத்தெரிய வருகின்றது.

மருந்துகட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பஞ்சு, பண்டேஜ் என்பன இல்லை எனவும், இதனால் விபத்து மற்றும் காயங்களிற்குமருந்து கட்டச் செல்லுபவர்களை துணிகொண்டு வருமாறு கோருவதாகவும் தெரியவருகின்றது. [உ-75]

## துறையூர் நூல் நிலையம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை துறையூர் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு கடந்த புதன் கிழமை திறப்புவிழா இடம் பெற்றது.

நிலையத் தலைவர் இ. சிவநேசன் தலைமையில் இடம் பெறும் மேற்படி நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் செ. இரத்தினம், பிரதேச சபைத் தலைவர் என்.கருணாகரகுருமூர்த்தி ஆகியோரும் அந்நிகழ்வில் கலந்துகொண்டனர். [க-75]

# நாணய மாற்று வீதத்தில் ஏற்ற இறக்கங்களை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாணய மாற்று வீதத்தில் தேவையற்ற ஏற்ற இறக்கங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி நிதியமைச்சர் ஜீ. எல் பீரிஸ் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை, சந்தை நிலைவரம் மிகவும் ஸ்திரமாக இருப்பதாகவும், குறுகிய கால இடைவெளிக்குள் இதன் அறிகுறிகள் தென்படுவதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

நாணயத்தை மிதக்க விட்டமை தொடர்பாக அமைச்சர் சபையில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி 23 ஆம் திகதியிலிருந்து அமெரிக்க டொலரின் கொள்வனவு, விற்பனவு விலைகள் தொடர்பான அறிவிப்பு விடுப்பதை இலங்கை மத்தியவங்கி தவிர்த்துக் கொண்டாலும்,

இந் நாணய மாற்று வீதத்தில தேவையற்ற ஏற்ற இறக்கங்களை தவிர்க்கும் நடவடிக்கைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியுள்ளது

(செ)

# மெலிஞ்சிமுனையில் மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி பணிமனையின் எல்லைக்குள் மலேரியா நோய் பரவலாம் என எதிர்பார்க்கப்படும் இடங்களில் மலேரியா நோய்த் தடுப்புநடவடிக்கைள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் கடந்த ஒரு வாரகாலமாக மெலிஞ்சி முனை கிராமத்தில் மலேரியா நோய்த்தாக்கம் கண்டறியப்பட்டதை அடுத்து.

அங்கு உள்ள 160 இற்கும் மேற்பட்ட குடியிருப்புக்களுக்கும் மலத்தியோன் விசிறப்பட்டிருப்பதாக ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி எஸ் திவ்விய குமரன் தெரிவித்துள்ளார். (உ-75)

# கோப்பாய்ப் பிரிவு பாடசாலைகளுக்கு மேல்மாடி அமைப்பதற்கு 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளுக்கு மேல்மாடி அமைப்பதற்கென தலா இருபது இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாணவர் சகாய நிதியிலிருந்தும் மற்றும் இதர துறைகளிலிருந்தும் இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது

கோப்பாய் நாவலர் வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மேல் மாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. (க-79)

# வேலைக்காரச் சிறுமியை கொடுமைசெய்த எஜமானி

(கொழும்பு)

வீட்டில் வேலைக்கு நின்ற தமிழ்ச் சிறுமியை எஜமானியின் மகள் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கியதில் அயலவர்களால் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள சம்பவம் மலையகப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பண்டாரவளையைச் சேர்ந்த செல்வகுமாரி [வயது 13] என்ற தமிழ்ச் சிறுமியே இவ்வாறு கொடுமைக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இச் சிறுமியின் உடலில் பலத்த எரிகாயங்களும் பழைய காயத் தழும்புகளும் காணப்படுகின்றது.

பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை தலைமறைவாகி விட்ட வீட்டு எஜமானியின் மகளை பொலிஸார் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ)

# சைக்கிள்-கார் மோதல் வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டி - கார் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் துவிச்சக்கர வண்டியில் பயணம்செய்தவர் படுகாயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பட்டப் பாலத்திற்கு அண்மையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இவ் விபத்தின்போது கந்தையா கணபதிப்பிள்ளை (வயது-50) என்பரே காயமடைந்தவராவார். (க-09-12)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்கட்டுப்படுத்த விரைவில் திட்டம் அமுல்

(கொழும்பு).

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாட்டில் அதிகரித்து வருவதையடுத்து அதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கடுமையான சட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக மகளிர் விவகார அமைச்சர் சுமேத ஜயசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் ஆலோசனையின் பேரில் இது தொடர்பான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர்குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் விவகார அமைச்சின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(உ-3)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் இயங்கி வரும் மிதிவெடிவிழிப்புணர்வு மூவினரால் இம்மாதம் 27 ஆம்28ஆம் திகதிகளில் மிதிவெடிவிழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

தென் மராட்சி. கொடிகாமம், பச்சிலைப்பள்ளி ஆகிய பிரிவுகளுக்கு உட்பட்ட சமுர்த்தி அலுவலர் களுக்கே யாழ்செயலகத்தில்இக்கருத்தரங்கு நடைபெற உள்ளது.

[உ-6]

# செலூலர் தொலைபேசி உள்வரும் அழைப்புகளுக்கு கட்டணம் இல்லை

(கொழும்பு)

செலூலர் தொலை பேசிகளுக்கு வரும் அழைப்புக்களுக்குகட்டணம் அறவிடாமல் விடுவது பற்றி தபால் தொலைத் தொடர்பு அமைச்சு பரிசீலனை செய்து வருகிறது.

செலூலர் தொலைபேசியை பயன்படுத்தும் சுமார் 3 இலட்சம் பேருக்கு இச்சலுகை வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

இது பற்றி தொலைத் தொடர்பு ஆணைக்குழு அமைச்சு செலூலர் தொலைபேசி வழங்கும் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக தெரியவந்துள்ளது.

இருந்த போதிலும் செலூலர்தொலைபேசிநிறுவனங்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக தெரிய வருகிறது.

(உ-7)

# வட ஈராக் விமான நிலையங்களில் அமெரிக்க விமானங்கள் தாக்குதல்

(பக்தாத்)
வட ஈராக்கிலுள்ள விமானப்பாதுகாப்புக்களை அமெரிக்க விமானங்கள் மீண்டும் தாக்கியுள்ளன.

கடந்த வாரம் அமெரிக்க, பிரிட்டிஷ் விமான தாக்குதலில் சில குண்டுகள் இலக்குத் தவறிய போதிலும், இத்தாக்குதல் வெற்றிகரமாக அமைந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

## அறுபது வயதிலும் இப்படிச் சாதனை

அறுபது வயது முதியவர் ஒருவர் இந்தியாவிலிருந்து மெக்காவிற்கு ஹஜ்யாத்திரைக்காக கால்நடையாகச் சென்று சாதனை புரிந்துள்ளார்.

ஹாஜிமுகம்மது ஜபர் ஹபர் என்பவரே இவ்வாறு நடந்து சாதனை படைத்தவர்.

மூன்று வருடங்களாககாடு, மலை, ஆறு என்பவற்றைக் கடந்து சென்றுள்ளார்.

இவர் நடந்த தூரம் 17 ஆயிரம் கிலோமீற்றர் ஆகும். [செ]

## மாடி இடிந்து வீழ்ந்ததில் பதினெட்டுப் பேர் பலி

(டமஸ்கஸ்)
சிரியாவில் கடந்த வியாழனன்று நான்கு மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 18 பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதுடன் 35 பேர் மோசமான காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

8 மாடி தொடர் குடியிருப்புக்களைக் கொண்ட இந்த அடுக்குமாடிக் கட்டடம் உரிய முறையில் அடிப்படை வசதிகளுடன் கட்டப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-9)

## ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி

(புதுடில்லி)
பங்களாதேஷ், இந்திய அணிகளுக்கிடையில் டாக்காவில் நடைபெற்ற 17 வயதுக் குட்பட்டோருக்கான 'ஆசிய கப்' கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றியீட்டியுள்ளது.

இந்திய அணி, பங்களாதேஷ் அணியை 6 விக்கட் வித்தியாசத்தில் தோற்கடித்து 226 ஓட்டங்களைப் பெற்றது. (செ-8)

## புலிகளை ஆதரிப்பதற்கும் தேர்தலுக்கும்தொடர்பில்லை

(சென்னை)
விடுதலைப் புலிகளை பா.ம.க ஆதரிப்பதற்கும் எதிர் வரும் சட்ட மன்றத் தேர்தலுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று பாட்டாளி மக்கள் கட்சி கருத்துத் தெரிவித்துள்ளது.

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அ.தி.மு.கவுடன், பா.ம.க சேர்ந்திருப்பது அமோக வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாகவுள்ளது.

அ.தி.மு.க அணியில் காங்கிரசும், பா.ம.கவும் சேர வேண்டும் என்று ஏற்கனவே டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார். நாங்கள் அதை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம் என்று, நிருபர்களிடம் பேட்டி அளித்த பா.ம.கட்சித் தலைவர் ஜி. கே. மணி தெரிவித்துள்ளார். (செ)

## சீனா நிலக்கரிச் சுரங்க விபத்தில் தொழிலாளர் பலி

(பீக்கிங்)
சீனாவில் இரு வேறு நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில் 32 சுரங்கத் தொழிலாளர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மத்திய சீனாவில் உனான் மாகாணத்தில் உள்ள குலிசியன் சுரங்கத்தில் வியாழன் அன்று ஏற்பட்ட ஒருநிலத்தடி எரிவாயு வெடிப்பில் 21 சுரங்கத் தொழிலாளர் நிலத்துள் சிக்குண்டதில் இதுவரை 18 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதுடன் 3 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே லிஞ்சியாள் உய்பூர், சுயாட்சிப் பகுதியில் உள்ள சூகாங் நிலக்கரிச்சுரங்கத்தில் வெப்பம் மற்றும் விஷவாயு தாக்கியதில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை இம் மாதம் சீனாவில் ஏற்பட்ட சுரங்க விபத்துக்களில் 60 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-7]

## தி.மு.க.வின் தலைவராக மு.க.ஸ்ராலின் நியமனம்?

(சென்னை)
இந்தியாவின் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலேதனது இறுதித் தேர்தல் என கருணாநிதி தெரிவித்ததை அடுத்து தி.மு.க.வின் தலைமைப் பகுதிக்கு கலைஞர் கருணாநிதியின் மகன் மு.க. ஸ்ராலின் நியமிக்கப் படுவார் என இந்திய அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

சென்னை மேயராக இருக்கும் தனது மகன் ஸ்ராலினைக் கட்சித் தலைமைக்கு கொண்டு வரும் எண்ணம் கலைஞரிடம் நீண்ட நாளாக இருந்து வருகிறது.

அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு முதலாவது நடவடிக்கையை இப்போது கலைஞர் எடுத்துள்ளார். இந்தத் தடவை சட்டசபைத் தேர்தலில் ஸ்ராலின் நிறுத்தப் படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது. (செ-9)

## உலக தரிசனம்

புஷ் நிர்வாகம் வளைகுடாவில் கவனம் செலுத்தும் என்பதையும், ஈராக்கியவிமானப் பாதுகாப்பை மங்கச் செய்யும் என்பதையும் தாம் சதாம் ஹூசைனுக்கு உணர்த்த வே கடந்தவெள்ளிக்கிழமைஈராக்கில் ராடர்கள், இராணுவ தொடர்புசாதனங்கள் ஆகியவை தாக்கப்பட்டன என்று புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கடற்படையின் புதிய வழிகாட்டிக் குண்டுகளில் அரைவாசிக்குச்சற்று அதிகமானவையே ராடர் நிலையங்களைத் தாக்கியதாகவும் புஷ் தெரிவித்துள்ளார் (செ)

## செய்திப்பரல்

★ பக்தாத் மீது இடம் பெற்ற அமெரிக்க பிரிட்டிஷ் விமானத் தாக்குதல் குறித்து சிரிய அரசுடன்பேசஈராக்சபாநாயகர்சதூன்ஹமாதி டமஸ்கஸ் சென்றுள்ளார்.

★ பிஜியின் இடைக்கால அரசு குறித்த பிஜி உயர் நீதி மன்றத் தீர்ப்பை இராணுவ ஆதரவு பெற்ற இடைக்கால அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென அவுஸ்திரேலியா கேட்டுள்ளது.

★ பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட 3 போஸ்னிய சேர்பிய தளபதிகளுக்கு ஐ நா. நீதிமன்றம் சிறைத்தண்டனைவழங்கியுள்ளது.

★ தேன் நிலவை கொண்டாடி விட்டு வீடு திரும்பிய பிறேசில் பெண் ஒருவர் தென்னாபிரிக்க கார் விபத்தில்கொல்லப்பட்டார்.

★ ஈராக் தலைவர் சதாம் ஹூசெய்ன் உலகிலேயே மிகவும் அபாயகரமான தலைவர் என பிரிட்டிஷ்பிரதமர் ரொனி பிளேயர் கூறியுள்ளார். (செ-9)

## நிலநடுக்கம் மூவர் பலி

(பீக்கிங்)
தென்மேற்கு சீனாவில் கடந்த வெள்ளியன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மூன்று பேர் உயிரிழந்துளனர் 63 பேர் காயமடைந்துள்ளர்.

இதேவேளையில், ஜப்பானில் நேற்று சிறிய அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் எனினும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் டோக்கியோ செய்திகள் தெரிவித்துள்ளன. (க-08)

## கிரேக்கத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம்

(ஏதென்ஸ்)
பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலமொன்று தமது நாட்டில் உருவாக்கப்பட்டு வருவதாக கிரேக்க அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஜூன்மாதம் பிரித்தானிய ராஜதந்திரியொருவர் கிரேக்கத்தில் கொல்லப்பட்டமையும் கிரேக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மீது கடந்தமாதம் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டமையையும் அடுத்தே பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் தாம் இறங்கியுள்ளதாக கிரேக்க அரசு அறிவித்துள்ளது

2004 ஆம் ஆண்டில் கிரேக்கத்தில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற இருப்பதாகவும் அங்கு பாதுகாப்பை பலப்படுத்தவேண்டிய தேவைஉள்ளதாவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (செ-9

## ஐ. நா. பாதுகாப்புச்சபை அவசர வேண்டுகோள்

(நியூயோர்க்)
கொங்கோ குடியரசில் மோதலில் ஈடுபடும் அனைத்து படைத்தரப்பும் அடுத்த மாதம் அளவில் தமது முன்னணி நிலைகளை விட்டு வெளியேற வேண்டும் என ஐக்கிய நடுகள் பாதுகாப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது,

இப்படைகள் அனைத்தும் வெளியேறும் பட்சத்தில் கொங்கோவில் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஐ.நா கண்காணிப்பாளர்கள் ஈடுபட வாய்ப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில்கொங்கோ ஜனாதிபதி கிளர்ச்சிக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனவும், கொங்கோவில் சுதந்திர தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் ஐ.நா பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. (க-3)

## பிரிட்டனிலிருந்து இறைச்சி இறக்குமதிக்கு பல நாடுகள் தடை

பிரிட்டனில் கால்நடைகளுக்கு புதிய வைரஸ் தொற்று நோய்ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து அங்கு இருந்து இறைச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய உணவு வகைகளை இறக்குமதி செய்வதை உடனடியாகத் தடைசெய்வதற்கு பல நாடுகள் திட்டமிட்டுள்ளன.

இந்நோய் கால்நடைகளின் கால்பாதம், வாய் ஆகிய பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு எந்தவித தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மனிதர்களிலும் இந்த நோய் அரிதாகவே காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டுள்ளது. (செ-3)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப் மாதம்24 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### கரவெட்டி

| | |
|---|---|
| 165236 ஏ | 165236 பி |
| 165236 சி | 168023 ஏ |
| 168023 பி | 168023 சி |
| 168023 டி | 176233 ஏ |
| 176233 பி | 176233 சி |
| 176233 டி | 176233 ஈ |
| 177748 ஏ | 177748 பி |
| 177748 சி | 177802 ஏ |
| 177802 பி | 177858 ஏ |
| 177870 ஏ | 177870 பி |
| 180608 ஏ | 181110 ஏ |
| 181204 ஏ | 181229 ஏ |
| 181229 பி | 181229 சி |
| 181261 ஏ | 181261 பி |
| 181271 ஏ | 181348 ஏ |
| 181348 பி | 182263 ஏ |
| 182263 பி | 182291 ஏ |
| 182316 ஏ | 182316 பி |
| 182316 சி | 182323 ஏ |
| 182358 ஏ | 182359 ஏ |
| 182359 பி | 182376 ஏ |
| 182388 ஏ | 182388 பி |
| 182399 ஏ | 182423 ஏ |
| 182479 ஏ | 182479 பி |
| 182479 சி | 182479 டி |
| 182512 ஏ | 182530 ஏ |
| 182561 ஏ | 182561 பி |
| 182561 சி | 182571 ஏ |
| 183533 ஏ | 183666 ஏ |
| 183675 ஏ | 183691 ஏ |
| 183691 பி | 181691 சி |
| 181691 டி | 183692 ஏ |
| 183770 ஏ | 181229 டி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 142169 ஏ | 179467 ஏ |
| 181503 ஏ | 181503 பி |

| | |
|---|---|
| 182580 ஏ | 182870 ஏ |
| 182870 பி | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 172478 ஏ | 172472 பி |
| 176291 ஏ | 176291 பி |
| 176361 ஏ | 176361 பி |
| 177653 ஏ | 177653 பி |
| 177792 ஏ | 177792 பி |
| 177792 சி | 177800 ஏ |
| 177800 பி | 177800 சி |
| 177800 டி | 177800 ஈ |
| 1778ں0 எவ் | 180409 ஏ |
| 180409 பி | 180507 ஏ |
| 181136 ஏ | 181136 பி |
| 182204 ஏ | 182395 ஏ |
| 182395 பி | 182395 சி |
| 182395 டி | 182395 ஈ |
| 182395 எவ் | 182472 ஏ |
| 182554 ஏ | 182560 ஏ |
| 182560 பி | 182563 ஏ |
| 182563 பி | 182563 சி |
| 182563 டி | 183571 ஏ |
| 183618 ஏ | |

### சாவகச்சேரி

180501 ஏ

### நல்லூர்

182815 ஏ

### தெல்லிப்பழை

174966 ஏ

### உடுவில்

| | |
|---|---|
| 174833 ஏ | 178241 சி |
| 178241 பி | 178647 ஏ |
| 178647 பி | 178647 சி |
| 178647 டி | 179204 ஏ |
| 179204 பி | 181550 ஏ |
| 181550 பி | 182713 ஏ |
| 182713 பி | 182713 சி |
| 183044 ஏ | 183044 பி |
| 183044 சி | 183044 டி |
| 183 44 ஈ | 183241 ஏ |
| 183241 பி | 183254 ஏ |
| 183254 பி | |

உண்ணற்க கள்ளை உணில்
உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டா தார்

குறள்

# வலம்புரி

## வீதியில் உறங்குகிறார்

யாழ். மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களில் கசிப்பு உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. மூலைக்கு மூலை இன்று கசிப்பு உற்பத்தி நடந்து கொண்டிருக்கிறது. இவையெல்லாம் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களுக்கோ அல்லது மதுவரித்திணைக்களத்திற்கோ தெரியாமல் அல்ல. அப்படியிருந்தும் கசிப்பு உற்பத்தியின் வேகமும் அதனைக் குடித்து விட்டு வீதியில் விழுந்து கிடப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது. இதனைப் பார்க்கும் போது வேதனையாகவே இருக்கிறது. குடும்பத்தில் வறுமை தாண்டவமாட, மனைவியும், மக்களும் ஒருநேர உணவுக்காக ஏங்கி நிற்க கையில் கிடைத்த காசை கசிப்புக் கொட்டிலுக்குக் கொண்டு செல்லும் மனோநிலை எதனைக் குறித்து நிற்கிறது? 'இப்படியும் ஒரு இரக்கமற்ற - பாசமற்ற உளப்பாங்கு தமிழர் பண்பாட்டில் உண்டா என்றெல்லாம் கேள்விகள் எழுவது நியாயமே.

எத்தனையோ நியாயங்கள், நீதிகள் பேசுகின்றோம். பாடசாலைகளில் சமயக்கல்வி போதிக்கப்படுகிறது. சனசமூகநிலையங்கள் சந்திக்குச் சந்தி குந்தியுள்ளது. போதாக்குறைக்கு வீதியின் இருமருங்கிலும் சமாதான நீதிவான்களின் பெயர்ப்பலகை. நிலைமை இப்படியிருக்கும் போது உயிர் கொல்லியான கசிப்பை ஒழித்துக்கட்ட முடியவில்லையே என ஆராய்ந்தால் அதற்கு மூன்று காரணங்களே இருக்க முடியும்.

ஒன்று கசிப்புக் குடிப்பவர்களில் 90 வீதமானவர்கள் வறுமைக் கோட்டிற்குள் வாழ்பவர்கள் எனவே அவர்களைப்பற்றி வேகமாய் ஓடிச் செல்லும் சமூகத்தால் ஒரு கணம் நின்று பார்க்க முடியாது. அல்லது கசிப்புக் காய்ச்சுபவர்கள் நாட்டாமைத் தனமுடையவர்கள் அதில் நாம் தலையிட்டு கத்தி வெட்டு, வாள் வெட்டென்று வீண் வம்பு நமக்கேன். நடப்பது நடக்கட்டும் நாலு சுவருக்குள் நாம் இருப்போமென்பது இரண்டாவது காரணம்.

இவை இரண்டும்தான் இல்லையென்றால் மூன்றாவது, கசிப்பு உற்பத்தியாளர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை யாருக்கோ கப்பமாகக் கொடுக்கிறார்கள்.

# ஔவையார் என்னும் பெண் புலவர் ஒருவரா?

## ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்வது நன்று

ஔவையார் என்ற பெயரைச் சொல்வதும், ஒரு கிழப் பெண்ணுருவம் கைத்தடியொன்றுடன் குனிந்த நிலையில் காணப்படுவதாகவே தமிழ்ப் பெருமக்கள் யாவரும் தங்கள் மனக் கண்முன் நிறுத்திப் பார்க்கின்றனர். உண்மையிலே ஔவை என்ற சொல் எப்படிக்கையாளப்பட்டு வந்தது என்பதைக் கூறுவது கொஞ்சம் கஷ்டமாகவேயிருக்கின்றது. பாட்டியற்ற வல்ல பெண்பாலர்களை ஔவை என்று கூறுவதா? அறிவுரை தரும் கிழட்டு அம்மையார்களை அழைப்பதா? அல்லது சொந்தப் பெயர்தானே என்பது ஆராய்ச்சிக்குரிய விடயம். சந்திரனிற் படிந்திருக்கும் கறையை அதாவது அதன் மறுவை ஔவையார் என்று கூறிக் கதை சொல்லுபவர்களும் இருந்தனர். எத்தனை வகையாகச் சொன்னாலும் தமிழ்ப் புலவர் பிராட்டியென்பது ஔவையாரைக் குறிக்கும். பெண் புலவர்களையெல்லாம் ஔவையார் என்று கூறுவதென்பதும் தவறு. ஏனென்றால் பலபெயர்களால் அழைக்கப்பட்ட பெண்புலவர்கள் இருந்திருக்கிறார்கள்.

### சங்க காலம்

நம்மவர்கள் தமிழில் ஔவையார் பாடல்கள் என்று சொல்லப்படும் பாடல்களையெல்லாம் படிக்கும் போது, ஒரேயொரு ஔவையாரே எல்லாப் பாடல்களையும் ஆக்கித் தந்திருக்கிறார். என்று கருதுகிறார்கள். எனது கருத்துக்கு அவை சரியாகப் படவில்லையென்பதை இங்கு தெளிவுபடுத்தவேண்டியிருக்கிறது. இடப்பட்ட சொந்தப் பெயர்தான் ஔவையார் என்பது என்றால், அப்பெயருடன் புலமை பெற்றுத் திகழ்ந்த பல பெண்பாலார்கள் காலத்திற்குக் காலம் தோன்றி வாழ்ந்திருக்கிறார்கள். என்றே எண்ண வேண்டும். சங்க இலக்கியங்களை நாம் படிக்கும் பொழுது அங்கு ஓர் ஔவையைச் சந்திக்கலாம். அந்த ஔவையினுடைய செய்யுட்கள யாவும் சங்க கால நடையிலேயே அமைந்திருக்கின்றன. ஆத்திசூடி என்று கூறப்படும் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்ற பகுதிப் பாடல் நடைகளையும், ''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது, பூக் கொண்டுதுப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு'' என்ற பகுதிச் செய்யுள்களையும் நாம் படித்து நன்கு ஆராயின், வேறுவேறு விதமானவித்தியாசங்கள் காணப்படுவதை அறியலாம். விநாயகர் வழிபாடு அற்ற சங்கத் தமிழகத்து ஔவையும், விநாயகரகவல் பாடிய ஔவையும் ஒன்றென்று எண்ணுவது தவறாகும். பழைய சிவநெறியாம் சைவமதமும், இந்துமதமும் ஒன்றென்று கருதுவது போலத்தான் இது இருக்கின்றது. சிவநெறியைக் கடைப்பிடித்த ஔவையையும், இந்துமதத்தை அனுட்டித்த ஔவையையும் ஒன்றென்று கருதுவது எவ்வளவு தவறாகும். அதைவிட ஔவையார் ஒன்றென்றெண்ணுவதே முழுத் தவறாகும். திருவள்ளுவர் காலத்தில் ஓர் ஔவையார் வாழ்ந்ததாக வரலாறு கண்டோம். கம்பர் காலத்திலும் ஓர்ஔவையார் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது இதற்கிடையில்எத்தனை ஔவையார்கள் வாழ்ந்து மறைந்தார்களோ? கணக்கிட முடியவில்லை.

### தேவார காலம்

ஔவையாரால் பாடப் பட்டது என்று சொல்லப் படும் ''தேவர்குறளும் திருநான் மறை முடிவும, மூவர் தமிழும் முனிமொழியும், கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகமென்றுணர்'' என்ற வெண்பாவை அதற்குக் கூறப்பட்டிருக்கும் பொருளோடு தெளிவாக ஆராய்ந்து அறியின், அது பிற்கால ஔவையாரால் பாடப்பட்டது. சில வேளை கம்பர் காலத்துஔவையே அதைப் பாடியிருக்கலாம். என்று எண்ணக்கூடியதாக விருக்கிறது சிறப்பாகச் சொல்லப் போனால்

**மதிவாணர் செ. மதுசூதனன்**

பிற்காலத் தமிழிலக்கியங்களிடையே இத்தகைய மயக்கங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. என்பதையே சொல்ல வேண்டும். திருவிளையாடற் புராணத்தின் படி பார்க்கும் போது, திருவாசகம் பாடிய மாணிக்க வாசகர் முன்னதாகவும், அவர்காலத்திற்குப் பின்னர் பல்லவர் ஆட்சிக் காலத்தில் திருஞானசம்பந்தர் அப்பர் சுவாமிகள் வாழ்ந்ததாகவும் அறியக் கூடியதாக விருக்கின்றது. அப்பர், சம்பந்தர் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் சிறுத்தொண்டர் வரலாறு, திருவிளையாடற் புராணத்தில், மாணிக்க வாசகர் காலத்தில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் அரிமர்த்தன பாண்டியன் வரலாற்றில் காணப்படுகின்றது. அரிமர்த்தன பாண்டியன் ஒரு சமயம் பாடுகின்றான், ''அன்றுசிறுத்தொண்டனிடும் பிள்ளைக்கறியமுதும்மென்று சுவை தெரிந்த வேடனிட்ட ஊனும்போல் நன்று நசையாட்டியிடுபிட்டும் நயந்தருந்தி என்றும் அடியார்க்கெனி வந்தாய் எந்தாயே'' என்று இதன் மூலம் நாமறிவது என்னவென்றால் ஒன்றில் பாண்டியனும, மாணிக்கவாசகரும் பிற்பட்ட காலத்தவராக இருக்க வேண்டும். இன்றேல் பிள்ளைக்கறியமுது படைத்த சிறுத்தொண்டர் காலம் முந்தியதாக இருக்க வேண்டும். என்பதேயாகும். மணிவாசகரின் இனிய திருவாசகப் பாடல்களையும், அதன் நடைகளையும் உற்றுநோக்கின், சில ஆராய்ச்சியாளர்கள் கூறுவது போன்று கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று எண்ணுவதற்கிடமின்று.

பல ஆதாரங்களின் மூலம் கி. பி மூன்றாம் நூற்றாண்டு தான். அவர் காலகமன்று கூறமுடியும். அவர் இந்து மதம்சிறிதளவு தழுவிய சைவ நெறியைக் கடைப்பிடித்தவராகக் காணப்படுகின்றார். இம்மணிவாசகர் காலம் தேவாரம் பாடிய நாயன்மார்களுக்கு எப்படியும் முந்திய காலமே. அப்படி இது இருக்கையில், சிறுத்தொண்ட நாயனாரைப் பற்றிய பெரிய புராணம் கூறுகின்றது. அப்பர், சம்பந்தர் வரலாற்றுடன் மிகவும் சம்பந்தப்பட்டு விளங்குபவர் அவர்.

### மாறாட்டம்

இச்சிறுத்தொண்டர் காலம் பல்லவராட்சி மேன்மையுடன் திகழ்ந்த காலமாகும். இப்பேர்ப்பட்ட வரலாறுகளை முன்பின் யோசிக்காமல், சேக்கிழாரும், மற்றையோரும், தங்கள் மனம் போன போக்கிலே வெவ்வேறு விதமான பொய்யும், புழுகுகளும் சேர்த்து, படைத்தனர் என்று எண்ணும் போது வியக்காமலிருக்க முடியாது. இவ்வெல்லாவற்றிற்கும் முன்னர் தோன்றிய சிலப்பதிகாரம் என்னும் நூலில் கண்ணகி வரலாறு காப்பியமாகக் கூறப்பட்டிருக்க அதன் பின்னர் தோன்றிய பல இலக்கியங்கள் அவ்வரலாற்றுக்கு நேரெதிரான பல கொள்கைகளுடன் கண்ணகை வரலாற்றைப் படைத்து, தமிழ்ப்பெண்ணின் இலக்கணங்களையே அடியோடு மாற்றி, துர்க்கை காளி போன்ற தெய்வங்களுடன் சேர்த்துச் சமன்படுத்தி வழிபடுகின்றார்களே, இது பத்தினியைக் கௌரவிப்பதற்கு ஏற்ற முறையாகுமா? இதுவும் பிற்கலத் தமிழிலக்கியங்களிடையே ஏற்பட்ட மயக்க நிலைஎன்றே சொல்ல வேண்டும். இற்றைக்குப் பல நூற்றாண்டுகாலங்களின்முன் புகொற்றவைவழிபாடுநடந்து வந்த அயிரை மலை என்ற இடத்தில் ஐவருக்கு வாழ்க்கைப்பட்டபாஞ்சாலி பத்தினி என்ற பெயருடன் வழங்கப்படுகின்றாள். கொற்றவை பாஞ்சாலியாளாள், அயிரை மலை ஐவர் மலையென்று வழங்கப்படலாயிற்று; இப்படியாகவே குமரனை ஈன்ற கொற்றவை கோயில் என்று வரலாறு மாறி, பஞ்சவர் பத்தினி பாஞ்சாலி கோயில் என்று கூறு மளவிற்கு சதி செய்து விட்டது, இனந்தெரியாத பேர்வழி ஒருவராற் புனையப்பட்ட கட்டுக்கதை என்றே கூற வேண்டியிருக்கிறது. இவ்வாறாகப் பல இலக்கிய வரலாறுகளின் மயக்கநிலை, மக்களைத் தெளிவு பெற முடியாத ஓர் இக்கட்டான நிலைக்குக் கொண்டு வந்து தள்ளியிருக்கிறது என்றேகொள்ள வேண்டும்.

### மயக்கம்

பூரண உண்மைகளாகப் பலருக்கும் விளங்கக் கூடியதாக நடந்த வரலாறுகளில் உண்மை மயங்குவதற்கு இடமில்லை. இக் கட்டுக் கதைகளும், மனம்போன போக்கில் படைக்கப்பட்ட புனைகதைகளுமே மயக்கம் தருவனவாகும். இப்படியாகவே ஔவையும் மயக்கத்தைக் கொடுத்து விட்டது. சிலர் பேராதரவு பெற்றதாகத் தங்கள் பாடல்கள் திகழ வேண்டும் என்பதற்காக ஔவையாரின் பெயரில் மறைமுகமாக வெளிப்படுத்தியிருக்கலாம் என்றும் எண்ண இடமுண்டு. இடைக் காலமாகிய அப்பர், சம்பந்தர் காலத்தில் இந்துமதத்தவர்களாகிய வட இந்தியர்களின் கொள்கைகளெல்லாம், தமிழர் கடைப்பிடித்து வந்த சிவநெறியாம் சைவத்துடன் இரண்டறக் கலந்து வேறுபாடு காணமுடியாத ஒரே மதமாய் ஆகிவிட்டது. இதன் பின்னர் ஏற்பட்ட இந்து மதத்தைத் தழுவிய ஔவையாரும் புலவர்தான் சங்ககால நூல்களில் வரும் பாடல்களைப் பாடியவரும் ஔவையார் என்ற பெண் புலவரே! ஆகவே, ஔவையார் என்பது ஒருவரின் சொந்தப் பெயரன்று. புகழ் பெற்ற பெண் புலவர்களுக்கு அளிக்கப்பட்ட பட்டப் பெயராகவும் அதைக் கருத இடமுண்டு.

பிற்காலப் புலவர்களால் பாடப்பட்ட வரலாறுகள் போன்ற யாவும், ஒரு தொடர்பின்றி முன்பின் யோசிக்காமல் ஆக்கப்பட்டு மயங்கும் நிலையை உண்டாக்கியிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். ஔவையாரால் பாடப்பட்டவையென்று சொல்லப்படும் பாடல்கள் யாவற்றையும் தமிழ் அறிஞர்கள் நன்கு ஆராய்ந்தறிவதுடன் அதனதன் நடை, கொள்கை, போக்கு என்பவற்றையும் சிந்தித்து ஔவை என்பது எப்படி வந்தது? இயற்பெயரா? அல்லது பட்டப் பெயரா? என்பதை எல்லாம் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கித் தமிழ்த் தொண்டு புரிவார்களாக. சிறியேனது சிற்றறிவில் ஏற்பட்ட ஆராய்ச்சியில் தவறேதுமுண்டேல் மன்னித்து விளக்கம் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இக் கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

# வடமராட்சி கல்வி வலய விளையாட்டு ஆரம்பம்

(மந்திகை)

வடமராட்சி வலய கல்வித் திணைக்களத்தின் பருத்தித்துறை கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கான கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாக விருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில்13 வயதுக்குட்பட்டோர் மாணவர்கள் பங்கு பற்றும் இப் போட்டி மூன்று பிரிவுகளில் நடத்தப்படும்.

புலோலி, வல்வெட்டித்துறை ஆகிய இரு பிரிவுகளும் எதிர்வரும் 26ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்திலும் சிதம்பராக் கல்லூரி மைதானத்திலும் பி.ப. இரண்டு மணிக்கு நடைபெறும். பருத்தித்துறை பிரிவில் எதிர்வரும் 27ம் திகதி பி.ப இரண்டு மணிக்கு பருத்தித்துறை வடஇந்துமகளிர் கல்லூரியில்நடைபெறும்,

மருதங்கேணி கோட்டப் போட்டி இன்று 26ஆம் திகதி குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற விருக்கிறது.

இப் போட்டியில் தெரிவு செய்யப்படும் விளையாட்டு வீரர்கள் வலய மட்டப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-23)

## நாவலர்வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம)

நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ள யாழ்ப்பாணம் நாவலர் வீதியின் ஒரு பகுதியை திருத்தும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

கைலாச பிள்ளையார் கோவில் வீதிச் சந்திக்கும் கச்சேரி நல்லூர் வீதியுடன் இணைக்கும் சந்திக்கும் இடைப்பட்ட வீதியே தற்போது திருத்தம் செய்யப்படுகின்றது, (க-15)

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
[கி-1517]

## அரசு புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு
# கண்காணிப்புக்குழுவில் 'பாகிஸ்தான்

(லண்டன்)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டைக்கண் காணிக்கும் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவில்' பாகிஸ்தானை இடம்பெறச் செய்யும் முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மும்முரமாக ஈடுபட்டுள்ளார்;

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிலவும் நல்லுறவின் அடிப்படையில் பாகிஸ்தானை கண்காணிப்பு குழுவில் அங்கத்துவம் பெறச் செய்ய ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறாரென செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தியா உட்பட எட்டு நாடுகளைக் கொண்டதாக நோர்வேயினால் தயாரிக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுவில், பாகிஸ்தானை இடம் பெறச் செய்வதில் இலங்கை அரசு தீவிரம் காட்டினாலும், இதனை இந்தியா விரும்பாது. எனவே இவ் விடயத்தில் இந்தியாவின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ள ஜனாதிபதி சந்திரிகா இந்திய அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை பாகிஸ்தான் இலங்கைக்கு இராணுவஉதவிகளை அதிகமாக வழங்கி வருவதும், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து திரும்பியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

கண்ணைக்கவரும் தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் செய்து தருபவர்கள்
**சாரங்கா நகைமாடம்**
177/4. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[கி-1503]

## ஈழம் தவிர்ந்தஉரிமையை வழங்க அரசு தயார்
### புதுடில்லியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(புதுடில்லி)

ஈழக்கோரிக்கை தவிர்ந்த தமிழர்களுக்கான ஏனைய உரிமைகளைவழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் இதனாலேயே அவர்களுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடாத்த நாம் விருப்பங் கொண்டுள்ளோம்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிக்காபண்டாரநாயக்கா குமாரதுங்கா புதுடில்லியில் தெரிவித்துள்ளார்;

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப்பேச்சுவார்த்தையை இன்னமும் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம்மை நான் கேட்டுள்ளேன். எனினும் விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சில் எந்தளவு நாட்டம் கொண்டுள்ளார்கள் என்பது எனக்குத் தெரியாது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## சைக்கிள் ஓட்டப்போட்டி

(கொழும்பு)

விமானப்படையினர்50வது ஆண்டு பொன் விழா நிகழ்ச்சியின் போது சைக்கிள்ஓட்டப் போட்டி ஒன்று நேற்று கொழும்பில் நடத்தப்பட்டது இப் போட்டியில் இந்திய, பாகிஸ்தான் விமானப்படையினரும் கலந்துகொண்டனர்.

இப்பொன் விழாவையொட்டி கொட்டாஞ்சேனை சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் விசேடபிரார்த்தனையும் நடைபெற்றது பிரார்த்தனைக்கு முன்னர் இப் பகுதியில் தீவிர தேடுதல் நடாத்தப்பட்டது. (வ)

## பிரிட்டன் தடைசெய்யும்
# பயங்கரவாத அமைப்புகளின் பெயர்ப்பட்டியல் மே மாதத்தில்

[லண்டன்]

பிரித்தானியாவில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாதச் தடைச் சட்டத்தின்கீழ், தடைசெய்யப்படவுள்ள பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்ப்பட்டியல் இவ்வாரத்திற்குள் வெளியிடப்படுமென்று பிரித்தானிய தகவல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன:

எனினும் இவ்வமைப்புக்களின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதில் இழுபறி நிலை காணப்படுவதனால், இப் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுவது பெரும்பாலும் எதிர்வரும் மே மாதத்திலேயே சாத்தியமாகும் என்றும் செய்திகள் வெளிவருகின்றன.

இதேவேளை பிரித்தானியாவில் ஏப்ரல் மாதத்தில் பொதுத்தேர்தல் இடம்பெறுவதற்குரிய ஒழுங்குகள் இடம் பெறுவதனால் அநேகமாக பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்ப்பட்டியல் மே மாதத்திலேயே வெளியிடப்படுமென்று இராஜதந்திரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-4)

### போராட்டம்...

வாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெறுகிறது: (வ)

### போதிய..

தத்தை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்று கூறினார்.

இச் சத்திர சிகிச்சை நிலையத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 300 கோடி ரூபா தேவையாக இருப்பதால் அதை மக்களிடம் இருந்து பெறப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி வைத்திய சாலை 62 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது: (வ)

### அமைச்சுக்களில்...

களில் இனிமேல் நியமிக்கப்படும் எந்த நியமனமும் அனுமதிக்கப்படமாட்டாதெனவும். இவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அமைச்சர்களுக்கு சடுமையான உத்தரவு பிறப்பித்து கடிதம் அனுப்பிவைத்துள்ளது;

அமைச்சுக்களின் செலவீனத்தைக் குறைக்குமாறு ஜனாதிபதி கடந்த வாரமும் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது: (வ)

### புலிகள்...

அடித்தளமாக இருக்குமெனவும் இந்தியத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்;

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகள் மீதுவிதித்துள்ள தடையை அரசு நீக்க வேண்டும்மென்று கோரியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### 30 ஈழத்...

கோரியும், அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜேர்மனின் பிறிமன் மாநகரில் மாபெரும் ஊர்வலமொன்று இடம் பெறவுள்ளது:

இவ் ஊர்வலம் ஜேர்மன் தமிழர் சுய நிர்ணய உரிமை ஒருமைப் பாட்டுக்குழு மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 2ந் திகதி பிறிமன் நகரிலுள்ள புகையிரத நிலையத்தில்நடைபெறும்:

இதேவேளை ஜேர்மனின் நோத்வைன் வெஸ்பாடன்நகரிலிருந்துஈழத் தமிழர்களைத் திருப்பிஅனுப்ப ஜேர்மனிய அரசுமேற்கொண்டநடவடிக்கைஜேர்மன் தமிழர் உரிமை ஒருமைப்பாட்டுக் குழுமற்றும் மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவற்றின் போராட்டத்தின் மூலம் கைவிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

### யாழ். மாவட்ட

கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தின்ஒட்டு மொத்தமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை வருடாந்தம் பெருந்தொகையான பணத்தை ஒதுக்கி புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டுவருகிறது. இதனடிப்படையில் இவ்வாண்டும் சுமார் நூறு கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியின் மூலம் யாழ் மாவட்டத்தில் உள்ள இந்து, கிறிஸ்தவ தேவாலயங்கள், மீளக்குடியமர்த்த பகுதிகளில் உள்ள பாடசாலைகள் யாழ். போதனா வைத்தியசாலை உட்பட அரசினர் வைத்திய சாலைகள், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல், சந்தைகள், போக்குவரத்து ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபையின் அபிவிருத்தி வேலைகளுக்கும் இவ்வாண்டு சுமார் 5 மில்லியன் குறைக்கப்பட்டுள்ளது:

யுத்தச் சூழ்நிலைகளினால் வலிகாமம் வடக்குப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நீண்டகாலமாக குறைந்த அடிப்படை வசதிகளுடன் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் சுயவிருப்பத்தின் பேரில் ஒரு லட்சம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது;

நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டு அவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்பின் அங்கும் சென்று குடியேற முடியும் என்றும்கூறிய அதிகாரசபைத் தலைவர் வலிகாமம் பகுதியிலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன;

வலிவடக்குப் பகுதியில் தற்போது மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கு மின்சாரம்' போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். (வ)

## யுனிசெவ் அதிகாரி வன்னிக்கு விஜயம்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள சிறுவர்களின்நலன்கள் தொடர்பாக ஆராய்வதற்கு யுனிசெவ்வின் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுவன்னிக்கு சென்றுள்ளார்.

ஐ. நா. சபையின்வேலைத் திட்டத்தின் கீழ் இயங்கும் யுனிசெவ்வின் உயர்அதிகாரியான அன்ரிறொபேட் நோயிஸ் என்பவரே வன்னிக்கு சென்றுள்ளார்.

வவுனியாவுக்கு விஜயம் செய்த அன்ரிறொபேட் நோயிஸ் வவுனியாவில்உள்ள நலன்புரி நிலையங்களில்தங்கியுள்ள சிறுவர்களின் நிலை பற்றி கேட்டறிந்தும், நேரில் பார்வையிட்டபின்னர் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்குச் சென்றுள்ளார்.

## விடுதலைப் புலிகளை தடை செய்யக் கூடாதென கோருவோர் முட்டாள்களே
### சிங்கள ஜாதிக சங்கத் தலைவர் பேட்டி

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிரித்தானிய அரசு தடை செய்யக்கூடாதென்று கோருபவர்கள், ஒன்றில் முட்டாள்களாக இருக்க வேண்டும் அல்லது துரோகிகளாக இருக்க வேண்டும்:

இவ்வாறு சிங்கள ஜாதிய சங்கத் தலைவர் எஸ்.எல். குணசேகரா சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்:

அப் பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பரவலாக்கல் ஒரு தீர்வாக அமையமாட்டாது, அதிகாரப்பரவலாக்கலை எப்படி அமைத்தாலும் இனப்பிரச்சினை ஒரு போதும்தீரப் போவதில்லை.

விடுதலைப் புலிகளின் இலக்கு தமிழீழம் இதனை மறைந்த அமைச்சர் தொண்டமான் மற்றும் முன்னாள் இந்திய தூதுவர் கே.என். டிக்சிற் ஆகியோர் நன்கு உணர்ந்து வைத்திருந்தனர். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### கண்காட்சி

நெல்லியடி கட்டைவேலி கூட்டுறவுச் சங்கம் இவ் வருட நடுப்பகுதியளவில் எழுத்தாளர்களின் பணியை ஊக்குவிக்கும் முகமாக நூல்களை அறிமுகம் செய்வதோடு நூல் விற்பனைக் கண்காட்சியினையும் நடத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

இந்நிகழ்வின் முதற்கட்டப் பணியாக வடபகுதியிலுள்ள எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்யும் பணியில் ஆர்வம் காட்டி வருவதாகவும் இச் சமூக பணியினை விரும்பி தங்களுடைய நூல்களைசமர்ப்பிக்கவிரும்பும்எழுத்தாளர்களை தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர். (க-23)

நேரடி CD மூலம் புதிய, பழைய பாடல்களை கசட்டில் பதிவு செய்யவும் CDயில் இருந்து CDக்கு பதிவு செய்யவும் நவீன வீடியோ மிக்சிங் கமறா மூலம் படப்பிடிப்புகள் செய்யவும் மற்றும் உள்புற, வெளிப்புற படப்பிடிப்புகள் [Photo] மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும்
**மேகாஸ் வீடியோ ஓடியோ அன் மிக்சிங் ஸ்ரூடியோ**
23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி/1516)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
பிரசாந் - ஷாலினி நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
10-30, 2-30 ப.நே)
(புதிய வெளியீடு)
CD பிரதி
(கி/1482

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது;